# திருக்கழுக்குன்றம் சிறப்புநிலை பேரூராட்சி
## செங்கல்பட்டு மாவட்டம்

ந.க.எண்.132/2022 நாள்.01.04.2022

## ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை

செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம் சிறப்புநிலை பேரூராட்சி, இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் திட்டம் 2021–2022ன் கீழ் பேருந்து நிலையத்தின் மேற்கூரை பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி பணி மேற்கொள்ள மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 2022ம் ஆண்டு 20.04.2022 புதன்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை பேரூராட்சியின் செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் பெற்றுக் கொள்ளப்படும். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 20.04.2022 புதன்கிழமை அன்று பிற்பகல் 4.00 மணியளவில் திறக்கப்படும். பணி தொடர்பான ஒப்பந்தப்புள்ளி படிவங்களை இப்பேரூராட்சி அலுவலகத்தில் 19.04.2022 செவ்வாய்கிழமை மாலை 3.00 மணி வரை ஒப்பந்தப்புள்ளிகளுக்கான உரிய தொகையினை ரொக்கமாக மட்டுமே செலுத்தி இரசீது பெற்றுக் கொள்ளளலாம் அல்லது இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும் இணையத்தில் ஒப்பந்தப்புள்ளியினை 19.04.2022ம் தேதி பிற்பகல் 3.00 மணி வரை மட்டுமே பதிவேற்றம் செய்யலாம்.

## இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் திட்டம் 2021–2022

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்தப்புள்ளி படிவத்தின் விலை | காப்புத்தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 4, பேருந்து நிலையம் மேற்கூரை பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி பணிகள் | ரூ.20,00,000/– | ரூ.3360/– | ரூ.20,000/– |

### நிபந்தனைகள்

1. விநியோகஸ்தர் ஒப்பந்தப்புள்ளிக்கான விலைப்புள்ளிகள் அடங்கிய படிவத்தில் விலைப்புள்ளிகள் குறித்து மேற்படி வேலைக்கான மதிப்பீட்டில் 1% சதவீத தொகை செலுத்தப்பட்டு, தொழில்நுட்ப மதிப்பீட்டில் தேர்ச்சியடைந்து குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் மேலும் கூடுதல் 1% சதவீத டேவணித் தொகை செலுத்தியவுடன் பணி ஆணை வழங்கப்படும். பின்னர் 3%சதவீத தொகையினை பட்டியல் தொகையில் பிடித்தம் செய்யப்படும். மேலும் மேற்படி பணிகளுக்கான ஒப்பந்தப் புள்ளி படிவங்களை வலைத்தளங்களில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
2. ஒப்பந்தப்புள்ளி குறிப்பிட்டுள்ள கால வரையரைக்குள் மட்டும் பெற்றுக் கொள்ளப்படும் அஞ்சல்வழி மூலம் பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளுக்கான கால தாமதத்திற்கு பேரூராட்சி பொறுப்பேற்க இயலாது.
3. அடித்தல் திருத்தல் முழுமையாகவும், முறையாகவும் பூர்த்தி செய்யப்படாத ஒப்பந்தப்புள்ளிகள், பிணை வைப்புத் தொகையின்றி அளிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் நடவடிக்கை ஏதுமின்றி தள்ளுபடி செய்யப்படும். எக்காரணமும் அறிவிக்காமல் எந்த ஒரு ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொள்ளவோ (அ) மறுக்கவோ செயல் அலுவலர் அவர்களுக்கு பூரண அதிகாரம் உண்டு. மேலும் பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 19.04.2022 அன்று பிற்பகல் 3.00 மணிக்கு பிறகு ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் பெறப்படமாட்டாது.
4. ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சி மன்ற ஒப்புதலுக்கு பிறகே வேலைக்கான பணி உத்தரவு வழங்கப்படும்.
5. ஒப்பந்தப்புள்ளி தகுதி அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட உடன் பேரூராட்சி அலுவலகத்தில் வழங்கப்படும் மாதிரி படிவத்தில் ரூ.50/– மதிப்புள்ள அரசு முத்திரை தாளில் ஒப்பந்தம் செய்து தரவேண்டும்.
6. வேலைகள் குறிப்பிட்ட காலத்திற்குள் செய்து முடிக்க தவறினால் அவர்களால் செலுத்தப்பட்டிருக்கும் வைப்புத் தொகை (DEPOSIT) பறிசிறப்பு நிலை செய்யப்படுவதுடன் குறிப்பிட்ட வேலைக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அதனால் ஏற்படும் சகல இழப்புகளையும் சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து வசூலிக்கப்படும்.

7. வேலை செய்ய அனுமதி பெற்ற ஒப்பந்ததாரர் வேலை வேறு ஒருவருக்கு மறு ஒப்பந்தம் செய்வதோ அல்லது வேறு நபருக்கு மாற்றுவதோ கூடாது.
8. ஒப்பந்தப்புள்ளி வேலைகளுக்காக செலுத்தப்படும் வைப்புத் தொகை தணிக்கை முடிந்து தணிக்கை அறிக்கையில் தடையேதும் இல்லாத பட்சத்தில் தொகை திருப்பி வழங்கப்படும். மேற்படி வைப்புத் தொகைக்கு வட்டி ஏதும் வழங்கப்பட மாட்டாது.
9. பணிக்கான இறுதி பட்டியல் வழங்கும் போது பணிக்கான மதிப்பீட்டு தொகையில் ASD-3%, IT-2%, Edu.cess-3%, GST-2%, TNMWWF-1%, தொழில்வரி ஆகியவை பிடித்தம் செய்யப்படும்.
10. இதர நிபந்தனைகளை அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்துக் கொள்ளலாம்.
11. ஒப்பந்தப்புள்ளி அளிப்பவர் விற்பனை வரி செலுத்தும் TNGST, ISO 9000 மற்றும் I.S.I.தரச் சான்று பெற்றதாக இருத்தல் வேண்டும். மேலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் நேரடி விற்பனையாளருக்கான சான்று இணைக்கப்பட வேண்டும். சான்று இல்லையெனில் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும்.
12. பொருட்கள் இந்திய தர நிர்ணயம் மற்றும் பண்முறைத்தர நிர்ணயச்சான்று பெற்ற பொருட்களையே சப்ளை செய்தல் வேண்டும்.
13. ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை கூட்டவோ (அ) குறைக்கவோ (அ) ஒப்பந்தப்புள்ளி தள்ளி வைக்கவோ (அ) இரத்து செய்யவோ செயல் அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு.
14. பணிகளை துவக்குவதற்கு முன்பு பணி நடைபெறும் போது, பணி முடிக்கப்பட்ட பின்பு ஒவ்வொரு நிலையிலும் புகைப்படங்கள் எடுக்கப்பட்டு சமர்பிக்கப்பட வேண்டும்.
15. இப்பேரூராட்சியில் பணியினை எடுத்து பணி முடிக்காமல் நிலுவையில் உள்ள ஒப்பந்ததாருக்கு ஒப்பந்தப்புள்ளி நமூனா வழங்கப்படமாட்டாது அன்னாருடைய ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்மாட்டாது.
16. பேரூராட்சியில் வேலைகள் தொடர்பாக அரசாணைகள், நடைமுறை விதிகள் மற்றும் பேரூராட்சிகள் இயக்ககத்தின் மூலம் தெரிவித்துள்ள அறிவுரையின்படி வேலைகளை மேற்கொள்ள வேண்டும்.
17. கூடுதல் அளவு மேற்கொள்ளும் அவசியம் ஏற்பட்டால் செயற்பொறியாளரின் முன் ஒப்புதல் பெற வேண்டும்.
18. பணிக்கான ஒப்பந்த காலத்திற்குள் பணியினை ஒப்பந்தகாரர் மந்தமான முறையில் மிக மெதுவாக பணியில முன்னேற்றம் காண்பிக்கும் பட்சத்தில் (Penalty for Slow Progress) அபராதம் ஒப்பந்த மதிப்பில் 5% விதித்து பட்டியல் தொகையில் ஈடு செய்யப்பட வேண்டும்.
19. இறுதிப்பட்டியல் பணி முடிவறிக்கை (Completion Report) ஒப்புதல் பெறப்பட்ட பின்னேரே இறுதிப்பட்டியல் தொகை ஒப்பந்தகாரருக்கு வழங்கப்படும்.
20. பணிகுறித்த விபரங்கள் அடங்கிய தரமான பலகைகள் 4 அடி x 2 1/2 அடி (1.20m X 0.75அ) அளவில் ஏற்கனவே அறிவுறுத்தியவாறு வைக்கப்பட வேண்டும்.
21. ஒப்பந்தப்புள்ளிகள் குறித்து அரசு அவ்வப்போது வெளியிடு ஆணைகள் நிபந்தனைகள் இதற்கும் பொருந்தும்.

செயல் அலுவலர்,
திருக்கழுக்குன்றம் சிறப்பு நிலை பேரூராட்சி,
செங்கல்பட்டு மாவட்டம்.

1/4/22.

பெறுநர்,
பதிவு செய்யப்பட்ட அனைத்து ஒப்பந்ததாரர்கள்.
திருக்கழுக்குன்றம் சிறப்பு நிலை பேரூராட்சி